## நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II - 2015

நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய எஸ்எல்-பி 93 ஆம் இலக்க துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூலை 29 ஆம் திகதிய எஸ்எல்-பி 93 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.1 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியின் தெற்கு பகுதியில் நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்குவதன் மூலம் பாதுகாப்பான குடி தண்ணீரை வழங்குவதும் கொழும்பு நகரத்திலுள்ள வலயத்தின் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதும் அதன் மூலம் அப்பகுதிகளில் வாழ்க்கைச் சூழலை முன்றேற்றுவதற்கு பங்களிப்பு செய்வதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 10,330 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 10,846 மில்லியனானதுடன் அதில் ரூபா 7,989 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 8,388 மில்லியன் அல்லது 77.30 சதவீதம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 2,341 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,458 மில்லியன் அல்லது 22.70 சதவிதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2008 யூலையில் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2017 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 741.49 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேரி வரி நடைபெறும் வேலையின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், நடைபெறும் வேலைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு என்பவற்றின் பெறுமதி அதே தொகையால் குறைத்துக்கூறப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடையளிக்கும் முகவர் ரூபா 295.59 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டி கட்டணங்கள் மற்றும் கடப்பாட்டுக் என்பன அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த தொகை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 9,560.40 மில்லியன் பெறுமதியான நடைபெறும் வேலைகளின் பெறுமதி 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 10,577.40 மில்லியன் தொகையான நடைபெறும்

வேலைகளின் நேரொத்த பெறுமதியுடன் உடன்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 7,513.09 மில்லியன் தொகையான வெளிநாட்டுக் கடன்களின் மீதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 7,622.55 மில்லியன் தொகையான வெளிநாட்டுக் கடன்களின் மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமுலாக்கல் முகவரால் செயற்த்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை கையளிக்க இயலக்கூடியவாறு முறையான வழியில் செயற்திட்டத்தில் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1983 இன் 12 அம் இலக்க பணிக்கொடை அதிகாரச் சட்டத்திற்கு அமைய செயற்திட்டத்தில் 05 ஆண்டுகளிற்கு மேலாக காலத்தை பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களிற்கு பணிக்கொடைக்கான ஏற்பாடுகளை செய்வதற்கு செயற்திட்டமானது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 8,388 | 7,989 | - | 2,344 | 2,661 | 8,268 | 10,737 |
| இலங்கை அரசாங்கம் | 2,458 | 2,341 | 472 | 209 | 236 | -1,465 | 1,849 |
| மொத்தம் | 10,846 | 10,330 | 472 | 2,553 | 2,897 | 9,733 | 12,586 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் காலப்பகுதியானது 2015 நவம்பர் 12 இஜ் முடிவுறுத்தப்பட்ட போதிலும், செயற்திட்டத்தின் கீழான வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் காரணமாக 2017 மே 12 வரை செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. ஆகவே, மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு வங்கி உத்தரவாதத்துடன் ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட விசேட முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு அர்ப்பணிப்பு வங்கிக் கணக்கு ஒன்றிற்கு ரூபா 1,128.33 மில்லியன் தொகை மாற்றுவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல்

உள்ளவாறு அர்பணிக்கப்பட்ட கணக்கில் ரூபா 1,096.93 மில்லியன் தொகையான பயன்படுத்தா முற்பணம் இருந்தது.

(ஆ) செயற்திட்டமானது செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கலிலுள்ள தாமதம் காரணமாக 2015 தசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகமாக ரூபா 57.49 மில்லியன் தொகையான கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டனங்கள் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.2 பௌதீக செயலாற்றல்**

செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 98.50 சதவீத முன்னேற்றமாக அறிக்கையிட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தால் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட 21 ஒப்பந்த வேலைகளில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 ஒப்பந்தங்களின் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

அறிக்கையின் பந்தி 3.(அ) இல் குறிப்பிடப்படடவாறு, செயற்திட்மானது செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தியாக்கவதற்கு ஒப்பந்தகாரரின் அர்பணிப்பு வங்கி சேமிப்பு கணக்கிற்கு ரூபா 1,128.33 மில்லியன் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட ஒழுங்கமைப்பிற்காக நிதி அமைச்சின் ஒத்துழைப்பை பெற்றிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரரால் உழைத்த ரூபா 6.64 மில்லியன் தொகையான வட்டி 2015 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

**3.4. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை என்பவற்றால் வேண்டப்பட்டவாறு, செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5. வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்ட ரூபா 24.06 மில்லியன் தொகையான தண்ணீர் பரிமாற்றக் கிரயம் செயற்திட்ட நடவடிக்கைகளை அடைவதுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சிவில் நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர் ஊடாக ரூபா 84.71 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டததால் கொளவனவு செய்யப்பட்ட பொருட்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. ஆதலால், உண்மையாக தேவைப்பட்ட சொத்துக்களை மதிப்பிடாமல் செயற்திட்டத்தால் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது என்பதைக் குறிக்கின்றது.